நாகை மாவட்டம் வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி வேதாரண்யம் கிழக்கு ஒன்றியத்தில் வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.மீ.புகழேந்தி வாக்கு சேகரித்தார் . உடன் மாநில விவசாய அணி துணைத் தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், வேதாரண்யம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் என்.சதாசிவம், ஒன்றிய கழக முன்னாள் செயலாளர் கவிஞர் மாசி மற்றும் கழகத்தினர் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க, வேட்பாளர் இராணி நாமக்கல் ஒன்றியம் வகுரம்பட்டி ஊராட்சி வசந்தபுரம் மாருதி நகர் பொன்விழா நகர் கங்கா நகர் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்குப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார. இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் வி.கே.பழனிவேல், துணைச் செயலாளர் கணேசன், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் அகிலா, காங்கிரஸ் கட்சி ஷேக் நவீத் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

துவாக்குடி நகராட்சிப் பகுதிகளில்

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி தீவிர வாக்கு சேகரிப்பு!

திருவெறும்பூர், ஏப். 20 -

திருவெறும்பூர் சட்ட மன்றத் தொகுதியின் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளரும், தமிழகப் பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, துவாக் குடி நகராட்சிக்கு உட் பட்ட பல்வேறு பகுதிக ளில் (ஏப்ரல் 17) மாலை தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

வாக்கு சேகரித்த இடங் கள்.

அமைச்சர் அவர்கள் பின்வரும் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று பொதுமக் களைச் சந்தித்து ஆதரவு திரட்டினார்:

வலியடி கருப்பண்ண சுவாமி கோவில் தெரு துவாக்குடி வடக்கு மலை மற்றும் தெற்கு மலை செடி முருகன் கோவில் தெரு அண்ணா வளைவு பள்ளி வாசல் தெரு வ.உ.சி. நகர் வாக்கு சேகரிப்பின் போது அமைச்சர் பொதுமக்கள் மத்தியில் ஆற்றிய உரை யின் சிறப்பம்சங்கள்:

திராவிட மாடல் சாதனை: 2021 முதல் 2026 வரையிலான காலக்கட்டத் தில் தமிழக அரசின் “திரா விட மாடல்” ஆட்சியின் கீழ் செயல்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் நலத்திட் டங்களை விளக்கினார்.

துவாக்குடி வளர்ச்சிப் பணிகள்: இத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக வும், அமைச்சராகவும் இருந்து துவாக்குடி நக ராட்சியில் மேற்கொள்ளப் பட்ட பல்வேறு புதிய திட் டங்கள், முடிவுற்ற கட்டு மானங்கள் மற்றும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்ட பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

அரசின் சாதனைகளைத் தொடரவும், தொகுதியின் வளர்ச்சியை முன்னெ டுக் கவும் ‘உதயசூரியன்’ சின் னத்தில் வாக்களிக்குமாறு பொதுமக்களிடம் கேட் டுக் கொண்டார்.

பங்கேற்றோர்.

இந்நிகழ்வில் துவாக்குடி நகரமன்றத் தலைவரும், நகரச் செயலாளருமான காயாம்பு, வார்டு கவுன்சி லர்கள், வார்டு செயலாளர் கள், கூட்டணி கட்சி நிர் வாகிகள் மற்றும் பொது மக்கள் எனப் ஏராளமா னோர் திரளாகக் கலந்து கொண்டனர்.

பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் ஜி.கே.எம்.தமிழ்க்குமரன் அகரம் காலனி,செல்லியம்பட்டி,முத்தூர்,சோமனஹள்ளி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். உடன் திமுக ஒன்றிய செயலாளர் கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஆர்.சி.செல்வராஜ்,மற்றும் கூட்டணி கட்சியினர் உள்ளனர்.

குன்னம் சட்டமன்றத் தொகுதி

தி.மு.க. ஆட்சியில் வளர்ச்சி அடைந்த தொகுதியாக மாறியுள்ளது!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் தீவிர பிரச்சாரம்!

பெரம்பலூர், ஏப் . 20 -

பெரம்பலூர் மாவட் டம், குன்னத் தொகுதியில் போட்டியிடும் வேட்பா ளர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தீவிர பிரச் சாரம் மேற்கொண்டு வரு கிறார். ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி ஏற்பாட் டில் கொளக்காநத்தம், அயினாபுரம், அனைப் பாடி, கொளத்தூர், கூட லூர், இலுப்பைக்குடி, பிலி மிசை, கூத்தூர், நொச்சி குளம், புஜங்கராயநல்லூர், ஜெமீன் பேரையூர், அருண கிரிமங்கலம், திம்மூர், சில் லக்குடி, காரைப்பாடி, மேத்தால், இரசுலாபுரம், மாக்காய்குளம், இராமலிங் கபுரம், பாலம்பாடி ஆகிய கிராமங்களில் திறந்த வாக னத்திலும், நடந்து சென் றும் பொதுமக்களிடம் வாக்குகள் சேகரித்தார்.

அப்போது நொச்சிக்கு ளத்தில் சிவசங்கர் பேசுகை யில், குன்னம் தொகுதி பின்தங்கியதாக இருந்தது. நான் அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், மீண்டும் குன்னம் தொகுதி வளர்ச்சி பாதைக்கு சென் றுள்ளது. கொளக்காநத்தத் தில் ஒரு அரசு கலைக் கல் லூரி, சார் பதிவாளர் அலுவலகம் ஆகியவை கொண்டு வந்துள்ளேன். நீண்ட தூரம் சென்று போய் படித்த மாணவ, மாணவிகள் அருகிலேயே படிக்கும் நிலை ஏற்பட்டுள் ளது. வெண்மணியில் ஒரு அரசு ஐடிஐ கொண்டு வரப்பட்டுள்ளது. மின்சார பிரச்சினையை தீர்க்க கொளக்காநத்ததில் ஒரு துணை மின்நிலையம் கொண்டுவரப்பட்டுள் ளது. பெரம்பலூரில் மாதிரி பள்ளி ரூ.50 கோடியில் கட் டப்படுகிறது. நொச்சிகுப் பத்தில் ரூ.3 லட்சத்தில் சிமெண்டு சாலை அமைக் கப்பட்டுள்ளது. நொச்சிக் குளம்அரியலூர் இடையே ரூ.60 லட்சம் தார் சாலை அமைக்கப்பட்டுள்ளது. நொச்சியம்புஜங்கராயநல் லூர் சாலை, அங்கன்வாடி மையம், ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் என கடந்த 5 ஆண்டுகளில் பல் வேறு வளர்ச்சி திட்டங்களை கொண்டு வந்துள்ளேன். மீண்டும் திமுக ஆட்சி அமைந்தால் மக்காச்சோளம், முந்திரி தொடர்பான தொழிற் சாலை கொண்டுவரப்ப டும். ரூ.8 ஆயிரத்திற்கான கூப்பன் வழங்கப்படும். மகளிர் உதவி தொகை, தமிழ்புதன், நான் முதல் வன் திட்டத்திற்கான உதவி தொகை உயர்த்தி வழங்கப்படும். 5ம் வகுப்பு வரை இருக்கும் காலை உணவு திட்டம் 8ம் வகுப்பு வரை நீட்டிக்கப்படும். எனவே மீண்டும் திமுக ஆட்சிய அமைய மக்கள் எனக்கு வாக்களிக்க வேண் டும் என்று பேசினார். இதில் மாவட்ட பொறுப் பாளர் வீ.ஜெகதீசன், முன் னாள் ஊராட்சி மன்ற தலைவர் என். ராகவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வ.சுப்ரமணியன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி. ஆர்.சிவங்கர், தி.மு.க. நிர் வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக் கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பூமலர் பொன்னுசாமி எருமப்பட்டி மற்றும் மோகனூர் கிழக்கு ஒன்றியங்களில் வளையபட்டி, ரெட்டையாம்பட்டி, வள்ளுவர்நகர், மாரியம்மன் கோவில்தெரு, ரோஜாநகர், குரும்பபட்டி உள்ளிட்ட இடங்களில் கிராமப்புற பெண்களிடம் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் பெ.நவலடி, பி.பாலசுப்ரமணியம், மற்றும் பூவராகவன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி. சொக்கலிங்கம்

ஏப்ரல் 20 (2000)

தன் இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே தொடர்பு கொள்ள, பழகுகிற வாய்ப்பும் பெற்றிருந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, மக்கள் பணியாற்றுவதிலும், இந்த இயக்கத்தை வளர்ப்பதிலேயும், கொள்கையைக் காப்பதிலேயும் முன்நின்றவர்.

இவர் காஞ்சிபுரம் மாவட்டக் கழக துணைச் செயலாளராக பணியாற்றியவர்.

மாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1977, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்போரூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்தபோது, உடன் சிறை சென்று 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

“மக்களவையில் தொகுதி மறுசீரமைப்பு மசோதா தோற்கடிப்பு!

நாமக்கலில் தொடங்கிய போராட்டம் வெற்றி” பட்டாசு வெடித்து கொண்டாட்டம்!

கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. – பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், ஏப். 20 –

நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட தொகுதி மறுசீ ரமைப்பு சட்ட மசோதா, எதிர்க்கட்சிக ளின் ஒருங்கிணைந்த எதிர்ப்பால் தோற்கடிக்கப்பட்டது மக்களாட்சி மற் றும் கூட்டாட்சி தத்துவத்திற்கு கிடைத்த வெற்றியாகும் என நாமக் கல் கிழக்கு மாவட்ட திமுக செயலா ளரும், மாநிலங்களவை உறுப்பின ரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே.ஆர். என். இராஜேஸகுமார் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடந்த 16ஆம் தேதி நாமக்கல் வந்தி ருந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் கருப்பு சட்டை அணிந்து தொகுதி மறு சீர மைப் புக்கு எதிராக தமிழ்நாட்டில் முதன் முதலாக நாமக்கல் நல்லிபாளையத் தில் உள்ள என் கே செல்லப்பன் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டு இருந்த கொடிக்கம்பத்தில் கருப்பு கொடி ஏற்றினார்= 16ஆம் தேதி காலை ஏற்றிய கருப்புக்கொடி 17 ஆம் தேதி நடைபெற்ற மக்களவை யில் தோற்கடிக்கப்பட்டது

இதை எடுத்து முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் ஏற்றி வைத்த கருப்புக்கொடியை கே.ஆர்.என். இராஜேஸகுமார் எம்.பி இறக்கி வைத்தார்,

இந் நிகழ்ச்சிக்குப் பின்னர் செய் தியாளர்களிடம் பேசிய அவர், ஒன் றிய அரசு கொண்டு வந்த தொகுதி மறுசீரமைப்பு மசோதா தென்னிந் திய மாநிலங்களின் அரசியல் உரி மையை பறிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

குறிப்பாக மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு எதிராகவும், வட இந்திய மாநிலங்களுக்கு அதிகாரக் குவியலை அதிகரிக்கும் வகையி லும் இந்த மசோதா வடிவமைக்கப் பட்டிருந்தது என்றார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன், மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி நகர கழக செய லாளர் ராணா ஆனந்த், சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி வெற்றியை கொண்டாடினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா.வெ. நாராயணசாமி

ஏப்ரல் 20 (2012)

தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளர் – சட்டமன்ற உறுப்பினர் – திருவொற்றியூர் நகர்மன்றத் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர் “மா.வெ.நா.” என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர்.

திருவொற்றியூர் பகுதியிலே உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிற் சங்கத் தலைவராக பல ஆண்டுகாலம் பணியாற்றி, தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக பெரிதும் பாடுபட்டவர்.

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

“ மிசா கொடுமைக்கு ஆளான போதிலும், கொண்ட கொள்கையில் உறுதியோடு பணியாற்றியவர் மா.வெ.நா.!” என தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.